புது உலகம்



முத்து

ஐந்தாண்டுத் திட்டப் பாடல்கள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

சென்னை அரசாங்க செய்தித் துறை
வெளியீடு

முதற் பதிப்பு: ஆகஸ்ட் 1957.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1631
நன்கொடை எண்: 1631

விலை 15 காசுகள்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

முன்னுரை

நாட்டின் நலிவைப் போக்கி மக்கள் வளமான வாழ்க்கை வாழ்ந்திட நல்லறி வாளர்களால் ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பெற்றன. கடமையிலே கருத்தும், வினையாற்றும்வகையிலே ஊக்கமும்கொண்ட அரசாங்க ஊழியர்களாலும், அதிகாரிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெரும் அளவில் நல்கும்பொதுமக்களாலும், திட் டங்கள் வெற்றிகரமாக நிறைவேறி வரு கின்றன.

இத்திட்டங்களின் சாதனைகளைக் குறித்து பாலபாரதி திரு. ச. து. சு. யோகி, திரு. எஸ். டி. சுந்தரம், திரு. என். எஸ். சிதம்பரம் ஆகிய கவிஞர்கள் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே இச் சிறு நூல்.

இந்நூலின்கண் கிராம மக்களின் உள்ள மும் செவியும் விரும்பும் வண்ணம் சுவை யான இன்தமிழ்ப் பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. எல்லோரும் வாங்கிப் படித்து இன்புறுவார்கள் என்ற எண்ணத்துடன் இதனைவெளியிடுகிறோம்.

நெறியாளர்,
செய்தித் துறை.

பாலபாரதி திரு. ச. து. சு. யோகி
பாடல்கள்

ஆடு பாம்பே !

பொது

ஆடு நாகமே—கொண்—டாடு நாகமே—சிவ
நாதனுர்முடி—தனில்—மேவு நாகமே—சிவ
காமித் தேவிகை—வளை—யான நாகமே—பசும்
மாயனுர்துயி—லணை—யாகும் நாகமே—குக
னுடுலாசமாய்—விளை—யாடு நாகமே—கனிந்
தாடு நாகமே—தெளிந்—தாடு நாகமே—பதம்
பாடு நாகமே—இதம்—நாடு நாகமே—இசை
யோடு நாகமே—படம் மாடு நாகமே— (1)

பாழுறும்—தீமைகள்—யாவையும்—தீரவே
வாழிநம்—நாடென—வேயர—சாங்கமும்
போடுது—திட்டங்களே—அவைகளினுல்
போகுது—கஷ்டங்களே—என்பதைச்சொல்லி
(2)

நாட்டினிலே—வறுமைக்—கோட்டினிலே—
பஞ்சப்
பாட்டினிலே—வஞ்சப் பூட்டினிலே—நஞ்சு
வீட்டினிலே—நோயின் கேட்டினிலே—கஞ்சி
ஓட்டினிலே—என்னும்—ரேட்டினிலே—மக்கள்
வாட்டங் களைந்திடுமே—அஞ்சாண்டு
திட்டம்
வளமைகள் பொழிந்திடுமே—என்பதைச்
சொல்லி. (3)

நீர் வளமும்—தான்யச் சீர்வளமும்—வைக்கல்
போர் வளமும்—கல்வி யோர் வளமும்—
செல்வம்
சேர் வளமும்—இன்பம்—ஆர் வளமும்—என
எங்கெங்கும்—மங்கலமே—அஞ்சாண்டுத்
திட்டம்
பொங்கும் வளம் தருமே—என்பதைச்
சொல்லி. (4)

வீரத்திலே—தொழிற்—தீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே—அன்பு—வாரத்திலே—உப
காரத்திலே—ஞான சாரத்திலே—அலங்
காரத்திலே—கலைத்—தீரத்திலே—மக்கள்
நாகரீகம் பொங்கிச் செழிக்கும்—
அஞ்சாண்டுத் திட்டம்
நாட்டிலெங்குமின்பம் கொழிக்கும்—
என்பதைச் சொல்லி. (5)